# மெட்ரோ ரயிலில் சினிமா பார்க்கலாம்!

– நமது நிருபர் –

மெட்ரோ ரயிலில் பயணியர், சினிமா பார்த்த படி பயணம் செய்யலாம்.

சென்னை, விமான நிலையம் – வண்ணாரப் பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது. இந்த ரயிலில் பயணியர் வருகையை அதிகரிக்க, பல்வேறு வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தில், மெட்ரோ ரயிலில், 'சுகர் பாக்ஸ்' என்ற, 'செயலி'யில், திரைப்படங்கள், சீரியல்கள் பார்த்தபடி பயணம் செய்யும் வசதி, நேற்று முதல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. பயணியர், 'சுகர் பாக்ஸ்' செயலியை, பதிவிறக் கம் செய்து, உபயோகப்படுத்தலாம்.

இச்செயலியில், தமிழ், ஹிந்தி மற்றும் ஆங்கி லம் மொழிகளில், திரைப்படங்கள், சீரியல்கள், சினிமா நிகழ்ச்சிகளை பார்த்து ரசிக்கலாம். ரயிலில் வழங்கப்பட்டுள்ள, 'வை பை' வழியாக, இந்த புதிய வசதியை பெறலாம்.